உ

கடவுள் துணை.

திருமூர்த்திதேவர்களுடைய

செய்கையென்னும்

# கலியுக சமாதானம்.

———(ഠ)———

இஃது,

சிறுமணவூர்,

## முனிசாமி முதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

உ
கடவுள் துணை.

# கலியுகசமாதானம்.

—(*)—

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

கோபஞ்செய்யாதீர்—இது கலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்.

அநுபல்லவி.

கோபமகற்றிவிப ரீதபுராணத்தின்
தாபத்தைக்கேளுங்கள் ஞாபகமற்றோரே (கோ)

சரணங்கள்.

தருமத்தையொருபோதும் தாங்கள்நினையாரென்றும்
தஞ்சமென்றடுத்தோரை வஞ்சித்திடுவாரென்றும்
குருபத்தினிமாரை கூடநினைப்பாரென்றும்
கொடுத்தகடனைக்கேட்டால் அடிக்கத்துணிவாரென்றும்
கதைகட்டினீரே முந்தியுகத்தாரை
பதத்தில்வைத்தீரே இன்னும்

அடுத்தோரைவஞ்சித்து ஆஸ்திசேர்ப்பாரென்றும்
அளவுக்குமிஞ்சின ஸ்திரீயைப்புணர்வாரென்றும்
கடுத்தமுகக்குறி கல்மனத்தோரென்றும்
கலியுகத்தார்நல்ல நெறிநடவாரென்றும்
வீண்கதைகட்டி கதைகள்புராணத்தை
விபரீதமாக்கி

முறைவறையில்லாமல் மோடிசெய்வாரென்றும்
முன்பின்யோசிக்காமல் தன்னைமதிப்பாரென்றும்
மறைமனுசாஸ்திர விதிகடப்பாரென்றும்
மற்றவீண்கதைகளே மெத்தப்படிப்பாரென்றும்
புலம்பிவிட்டீரே கலியுகச்சிறுவரை
கலங்கவிட்டீரே இன்னும்

ஜாதிவரம்பில்லாமல் ஜனித்திடுவாரென்றும்
சகலமதத்தினோரும் ஒன்றாய்க்கலப்பாரென்றும்
ஈதலிரக்ககுணம் யார்க்குமிராதென்றும்
எண்ணம்போனபடி விண்ணாணம்சொன்னீரே

சுருதிகொண்டாரும்
சொல்கிறேன்கேளும்
குந்தியுகத்தாரென்ன
முதியோரிளைஞோரென்ற
அந்தயுகத்தாரென்ன
எல்லாஞ்சொன்னுலென்னை
கோபஞ்செய்யாதீர்
தோஷஞ்சொல்லாதீர்
கலியுகம்கலியுகம்
காணுந்தொழிலுக்கெல்லாம்
வலியுபுளுகிவைத்த
வருத்தத்திலிளைஞோரை
மிகப்பெரியோரே
கவனித்துப்பாரே
வசிட்டனூர்வசியென்னும்
வசிட்டன்சக்கிலிச்சிக்கு
பிரட்டன்சக்கிலிச்சிக்குப்
புலைச்சிக்கும்சத்திக்கும்
விதமறிவீரே
வியாசனென்பீரே
கலையின்வயற்றில்கலை
காராவின்வயிற்றிலே
புலைச்சிவயிற்றில்ஜாங்கிர
புரளிநாரதர்வண்ணான்
நீரறிவீரே
நூல்தெரிந்தோரே
கழுதைவயிற்றினில்
காட்டுவேடுவச்சிக்கு
பழுதற்றபிறவியாம்
பகரும்ஜம்புகர்
பாரறியாதோ
சுருதிசொல்லாதோ
மாண்டவ்யர்தவக்களை
மதங்கர்சக்கிலிச்சிக்குச்
நீண்டசிலைஅஸ்வத்
நீரறியீரோ
எதுகலியுகமாம்
இதுகலியுகந்தான்

உங்கள்முன்னோர்ஜாதி
அந்த
முறையோடேநடந்தது
முறையெங்கேயிருந்தது
இடையூறுசெய்தது
பொல்லாதவனென்று
இதுகலியுகமென்று
கலியுகமென்றிப்போ
நாணிச்சிரித்துக்கொண்டு
வியாசன்கதையைக்கொண்டு
பொருத்தவைதீர்களே
முந்தியுகத்தைக்கொஞ்சம்
அந்த
தாசிவயிற்றுப்பிள்ளை
வதுவைசெய்மாப்பிள்ளை
பிறந்தான்சத்தியமுனி
பிள்ளைபராசரன்
மீன்வலைச்சிமகன்
காட்டுக்
கோ[illegible]டார்பிறந்ததும்
கௌதம[illegible]கித்ததும்
பிள்ளையார்[illegible]த்ததும்
வீட்டிற்பிறந்ததும்
பலபல
காங்கேயர்பிறந்ததும்
வால்மீகர்ஜெனித்ததும்
பயிரவன்கெற்பத்தில்
சௌனகர்பிறந்ததும்
யாரில்லையென்றாலும்
மைந்தனாய்ப்பிறந்ததும்
சுதனாகவந்ததும்
தாமன்பிறந்ததும்
குதிரைவயிற்றிலென்று
இவ்வாறுஜனித்தமோ
அந்த

சுகருக்குக்கிளிமூக்குச்
சூரரனேகர்கள்
பகரும்பதஞ்சலி
பாரதகோரங்கள்
கோபஞ்செய்யாதீர்
தோஷஞ்சொல்லாதீர்

சுருதியுஞ்சொல்லாதோ
மிருகம்போலில்லையோ
வியாக்கிரமரறியீரோ
யாருக்குந்தெரியாதோ
இதுகலியுகமென்று

விதியிருந்தொருமாது
வினைப்பயனிருந்தங்கே
சதிசெய்தாளகண்டீரே
கலியுகசேஷ்டைகள்
விதிமறந்தீரோ
மதிமறந்தீரே

விபசாரஞ்செய்தாலும்
கணவனைப்பிரிந்தாலும்
சண்டாளக்கலியுகம்
காட்டுதுபாரென்று
யுகத்தையிழுத்துக்கொண்டு.

அகலிகையிந்த்ரனை
ஆரியர்பத்தினி
வலுவிலேசந்த்ரனை
அறிவுள்ளபெரியோரே
கோபஞ்செய்யாதீர்
தோஷஞ்சொல்லாதீர்

முந்தி
அணைந்துசரிதானோ
தாரையென்கிறமாது
வணைந்ததுமுறையாமோ
தெரியாமற்கேட்கிறேன்
இதுகலியுகமென்று

பூர்க்குமுன்குந்தியும்
பத்தினிதுரோபதை
வேர்கொண்டுசெ... ாங்கி
விஜயனைப்... ...து
அ... ...லியுகமோ
என்கெட்டயுகமோ

பிள்ளையைப்பெற்றாளே
கர்ணனைமதித்தாளே
விபரீதம்விளைத்தாளே
...மனதுக்குள்கினைத்தாளே
கலியுகமாத்திரம்
ஐயா

மாமியாருடைத்தது
மருமகளுடைத்தது
சாமிக்குமேகுரு
சங்கதிபோலநீர்
கோபஞ்செய்யாதீர்
தோஷஞ்சொல்லாதீர்

மண்குடமுங்கொண்ட
பொன்குடமாமென்று
சாமிகள்சொல்கிற
எங்கள்மீதுவீணாய்
இதுகலியுகமென்று

ஆடவருடனொரு
அவனைவைத்துக்கொண்டாள்
நாடுமறியுமிதை
நம்பிக்கையோடுரை
மறந்துபோனீரோ
புணர்ந்ததும்பொய்யோ

அமங்கலிபேசினால்
சுதனைக்கரைத்துப்போட்டாள்
நானுந்தெரிவேனென்று
வம்புசெய்பெரியோரே
வியாசன்முண்டச்சியை

விச்சித்ரவீரியன்
வனிதையம்பாலிகை

வதுவைசெய்துக்கொண்டு
யம்பிகையெனுமாதை

துஷ்டவியாசனவன் யிஷ்டப்படுத்திக்கொண்டு
துவாபரயுகத்திரு தாட்டிரன்பாண்டுவும்
அவன்பிள்ளையாமே பாண்டவர்குலம்வியாசர்
பரம்பரையாமே

இந்தப்படிக்கிருந்தி யுகத்திலனேகமாய்
இருக்கக்கலியுகம் யிதைமாத்திரம்வீணாய்
தொந்தப்படுத்தித்துஷ்ட தொழில்கள்நடக்குமென்று
தூறுசொல்லவந்த பேரில்பெரியோரே
கோபஞ்செய்யாதீர் இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்.

பிருகுரிஷியென்பவன் மாதாவைக்கொன்றானே
பரசுராமன்தாயைச் சிரச்சேதஞ்செய்தானே
பப்ரவாகன்பெற்ற தந்தையைவதைத்தானே
பிரம்மன்குமாரனைத் தானேஜபித்தானே
என்பெரியோரே கலியுகத்தில்மட்டும்
நடக்குமென்றீரே

திரேதாயுகத்துமன்னன் திருச்சங்குகுருவோடே
திறமாயெதிர்த்துப்போ. ராடினனதுபொய்யோ
பேரிற்பெரியவீஷ்மாச் சாரிதன்குருவான
பரசுராமனைப்படு களத்திலடித்தானே
இதுஞாயந்தானே நாங்கள்செய்தால்மட்டும்
என்குற்றமாமோ

சிறியமனிதர்செய்யும் சிறுபிழையொட்டுக்கும்
ஜென்மங்கள்பலவாறாய் பன்னுதேமறையெங்கும்
அரியரிஷிகள்தேவர் அறிந்துசெய்குற்றத்திற்
கவரென்னஜென்மங்கள் அடைந்தாரோசொல்லுங்கள்
கோபஞ்செய்யாதீர் இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

## கும்மி.

மாலுமயனரன் தேவர்களும்வெகு
மாக்ஷிமைதங்குந் தபோதனரும்
நாலுயுகத்திட செய்திசொல்லசிறு
நங்கையேநீங்களும் வாங்களடி. 1

தன்கரத்தாலே படைத்திட்டவூர்வசி
தன்னழகைக்கண்டு பிர்ம்மனவன்
உன்னிதமான கலைமானுருக்கொண்டு
ஓடிப்புணர்ந்தானும் பெண்ணரசே. 2

இப்பெருங்குற்ற மதைப்பார்த்துப்பர
மேசுரன்பிர்ம்மா வினைத்தடுத்து

தப்பிதமென்றவ னைந்துசிரசிலோர்
    தலையையறுத்தாராம் பெண்ணரசே. 3

பிந்திதிலோர்தமை தன்னைச்சிருட்டித்து
    பேதைமதிதயன் தான்பார்த்து
எந்தவிதமும் புணரவேண்டுமென்று
    எகித்துரத்தினன் கேளுங்கடி. 4

முந்தித்திலோர்த்தமை யோடிடவுமவன்
    பிந்திபிரமன் துறத்திடவும்
இந்திரன்கோட்டையில் போயிப்புகுந்திட
    ஏமாந்துநின்றானுங் கேளுங்கடி. 5

கன்னியுஞ்சென்று கதவடைக்கயிவள்
    கண்ணுந்தெரியாம லோடிடவே
தன்னுளமாரிக் கதவிலிடிக்கவும்
    தறையிலேகாமம் விடுத்தாண்டி. 6

கதவிலிடித்துக் கலிதமானவிந்தில்
    கலசமுனியும் பிறந்தானென்று
மதத்தைநிறுத்தும் முனிகள்சொன்னமொழி
    மண்டலங்காண வுரைத்தேண்டி 7

முந்தியுகமேயிவ் வாறிருக்கவடி
    மொய்குழலேநமக் கெப்படியாம்
இந்தயுகமட்டும் துஷ்டநடக்கையென்
    றெப்படிச்சொல்லுவார் கேளுங்கடி. 8

அத்திரிமாமுனி பத்தினியாமந்த
    அனுசூயையென்கிற வுத்தமியை
பத்திப்புணர்ந்திட வேணுமென்றுபர
    மேசுரன்விண்டு பிரமனுமாய். 9

மூவரும்பிராமண வேடமிட்டுவெகு
    மோகமாமுனி வீடடுத்து
ஆவலாகப்பிட்சை போடுமம்மாவென்று
    அந்தணர்போலவே நின்றனராம். 10

அந்தணர்பிட்சைக்கு வந்தனரேயென்று
    அனுசூயையம்மை யழுதெடுத்து
இந்தாருமையா யெனவணங்கயிவர்
    என்னென்றுரைத்தாராம் பாருங்கடி. 11

கச்சைகலையுங் களைந்துநிர்வாணமாய்
    கண்ணுக்குமுன்னாலே வந்துநின்றால்
இச்சையானபிச்சை யதுவேபோதுமென்
    றின்பவபிநயங் காட்டினராம். 12

இம்மொழிகாதினில் கேட்டுரிஷிமாது
யாரடாபோக்கிரி பையலென்று
பொம்மைகள்போலவே மூவரையுஞ்சிறு
பிள்ளைகளாகச் சபித்துவிட்டார். 13
சேயுருவாக்கிக் கிடத்திடவுமப்போ
சிருஷ்டிசங்காரந் தடைபடவும்
ஆய்ந்துநாரத மாமுனிவன்கண்டு
அனுசூயைபம்மனைத் தானடுத்து. 14
மெத்தவுந்தீவிர மோடிவந்துரிஷி
பத்தினிகாலில் மிகப்பணிந்து
புத்தியில்லாதோர் பிழைபொறுக்கநல்ல
உத்தமர்க்கன்றியார் சொல்லுமம்மா. 15
மூவரின்சாபம் விலக்கவேண்டிமுனி
முடி[illegible]ாமல்கன்னிப் பதம்பணிந்து
ஒவ்வைமதியைத் திருப்பினதாலன்றோ
ஓடினார்மூவ ருலகமடி. 16
மூவரின்புத்தியிவ். வாறிருக்கச்சுத்த
மூடர்நமக்கு யெவ்வாறிருக்கும்
எவ்விதமிந்தக் கலியுகங்கெட்டதென்
றேதுக்குரைக்கிறார் கேளுங்கடி. 17
பிருகுரிஷிபெண்சாதி நாகவல்லியம்மை
பின்னுமழகா யிருப்பாளென்று
திருமூர்த்திமூவரும் சென்றுகற்பழிக்க
சேஷ்டைகள்செய்தாராம் பாருங்கடி. 18
மெல்லிமனது மிகக்கொதித்துயிவர்
மெத்தவுந்துட்டப் பயல்களென்று
பிள்ளைகளாக வுருப்படுத்தியிவரை
புரட்டிமூலையில் தள்ளிவிட்டாள். 19
ஆதியில்தேவர்க் கமுதளிக்கமாயன்
அற்புதமோகினி ரூபமெடுக்க
ஆதிசிவனும் விரகங்கொண்டங்ஙனே
ஆயனைக்கூடிக் கலந்தாண்டி. 20
அரியுமரனு மனுபவித்தவுடன்
அரிஹரனென்கிற பேர்வகித்து
பிரியமாயொரு பிள்ளையும்பெற்றாரே
பின்னையுஞ்சாட்சிகள் வேணுமடி. 21
தவத்தில்மிகுந்த வெண்ணாயிரம்பேரந்த
தாருகாவனத்துப் பெண்டுகளை
சிவனுமரியுமாய் செய்தவிபகாரம்
சீமையறியாதோ பெண்ணரசே. 22

இத்தனைதேவர் நடந்திருக்கயின்னும்
எத்தனைவேந்தர் நெறிபிரள
சித்துல்வாழ்க்கை மானிடர்மீதிலே
சொல்லுவதேன்குற்றம் கேளுங்கடி. 23
தான்பெற்றபிள்ளையாம் நூறுபேர்க்குமதி
தான்சொல்லிபுத்தி திருத்தாமல்
ஏனோசண்டாளராய்ப் போங்களென்றுசாபம்
இட்டான்வசிட்டனுங் கேளுங்கடி. 24
பிள்ளையைத்தந்தை செபிக்கலையாபெற்ற
தந்தையைப்பிள்ளை யெதுக்கலையா
மைந்தனைத்தந்தை வதைக்கலையாதேவர்
மர்மந்தெரியாதோ சொல்லுங்கடி. 25
குருவிலொருகுரு துரோணசாரியை
குந்திமக்கள்பஞ்ச பாண்டவர்கள்
தருமநெறியாரே குருவைக்கொலைசெய்ய
தையலேபாரதம் பாருங்கடி. 26
மாலின்பெண்டாட்டியோ மார்பினிலேமறை
வேதன்பெண்டாட்டியோ நாவுக்குள்ளே
ஆலத்தையுண்ட சிவனிடபெண்டாட்டி
ஐயோசிரசில் குடிபுகுந்தாள். 27
இப்படிதேவர் சுமந்திருக்கயிந்த
ஏழைமனிதற்கே காமமென்று
எப்படிவேத புராணங்கள்சொல்லுது
ஏனென்றுகேளடி பெண்ணரசே. 28
கட்டுக்கதையு முறைக்கவில்லைகலி
காலகுணத்தையுங் காட்டவில்லை
பெட்டகம்போலமுன் னோர்கள்வைத்ததை
பூமியறிய வுரைத்தேன்டி 29
ஜீவிக்கத்தந்திரம் செய்துதந்ததன்றி
தேவரையேளனஞ் செய்யவில்லை
பாவிப்பயலென்று யென்னைத்தூஷிக்காதீர்
பாவலர்க்கெல்லாஞ் சருணமைபா 30
கருணைகுணந்தஞ்சை பெரிசாமிப்பிள்ளை
கனிந்துசொன்ன மொழிப்படியெ
சிறுமணவூர்முனி சாமிசொன்னகவி
தேசப்புலவோர் பிழைபொறுப்பீர்

கலியுக சமாதானம்.

முற்றிற்று.